தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
**Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723**
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
**Volume - 1, Issue - 10, July - 2025**

DOIs: https://doi.org/10.63300/tm0109202504 --:-- Research Paper

# The Ecological Thoughts in Vairamuthu's Novel "Third World War"

**K. Mohanalakshmi,**
Ph.D. Research Scholar, **Registration Number: CRE/TAM22PNOV288/2022**
Karuppanna Mariyappan College, Muthur.
Research Guide: **Dr. S. Niranjana Devi**
Email: Lakshmimohana2011@gmail.com

***Abstract:*** *It is natural for a creator to incorporate not only the ideas that arise in their thoughts but also the events of the society they belong to. Vairamuthu is closely connected to the lives of the common people. In that vein, Vairamuthu has recorded in his novel "Third World War" themes such as the lifestyles of his native villagers, the contemporary life problems of agricultural people, the complexities in the agricultural profession, and organic farming. The purpose of this article is to explore Vairamuthu's skill in documenting concepts such as the pollution of land, water, and air – which are primary to the environment – and the effects of global warming in his novel "Third World War.".*

***Key Words:*** *Vairamuthu, Third World War, Global Warming, Conservation of Natural Resources, The Plight of Farmers, Global Heat, Prevention Methods..*

# வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் புதினத்தில் சூழலியல் சிந்தனைகள்

**கு.மோகன லட்சுமி ,**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,* ***பதிவு எண்:CRE/TAM22PNOV288/2022***
*கருப்பண்ண மாரியப்பன் கல்லூரி, முத்தூர்.*
*Lakshmimohana2011@gmail.com*
***நெறியாளர்:* முனைவர்.எஸ். நிரஞ்சனா தேவி**

**Abstract:** *படைப்பாளி தன் எண்ணங்களில் உதித்த கருத்துகளோடு தான் சார்ந்த சமூகத்தின் நிகழ்வுகளையும் கருப்பொருளாக்குவது இயல்பு. வைரமுத்து அடித்தட்டு மக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையவர். அவ்வகையில் வைரமுத்து தன் மண் சார்ந்த கிராமிய மக்களின் வாழ்வியல் முறைகள், விவசாய மக்களின் தற்கால வாழ்வியல் பிரச்சனைகள், விவசாயத் தொழிலில் உள்ள சிக்கல்கள், இயற்கை விவசாயம் போன்ற கருத்துக்களை மூன்றாம் உலகப்போர் நாவலில் பதிவு செய்துள்ளார். சுற்றுச்சூழலில் முதன்மையான நிலம், நீர் காற்று ஆகியவை மாசுபாடு அடைதல், புவி வெப்பமயமாதல் அதன் விளைவுகள் போன்ற கருத்துக்களை வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் புதினத்தில் பதிவு செய்துள்ள திறனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***குறிப்பு சொற்கள்*** *: வைரமுத்து,மூன்றாம் உலகப்போர், புவி வெப்பமயமாதல், இயற்கை வளம் பாதுகாத்தல், விவசாயிகளின் நிலை, புவி வெப்பம்,தடுக்கும் முறை..*

## முன்னுரை:

இந்த அகண்ட பிரபஞ்சத்தில் உயிரினங்கள் வாழத் தகுதிபெற்ற ஒரே கோள் 'ஆழிசூல் உலகு' என்று இலக்கியத்தில் குறிப்பிடப்படும் இப்பூமி. இந்த பூமியானது அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது. இப்பூமியில் மனித இனத்தின் அடிப்படைத் தேவைகளான நிலம், நீர், காற்று ஆகியவை தூய்மையாக இருப்பது அவசியம். இப்புவியானது மனித செயல்பாடுகளால் சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் புவி வெப்பமயமாதல்

போன்ற சூழலில் சிக்கல்களை சந்தித்து வருகிறது. மூன்றாம் உலகப்போர் புதினத்தில் சூழலில் குறித்தான சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது

**சூழலியல் விளக்கம்**

உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் தாங்கள் வாழும் இடத்தின் சூழலைப் பொறுத்து ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன. ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் உயிருள்ள இனங்கள், உயிரற்ற இயற்பியல் கூறுகள், அவற்றிற்கு இடையேயான தொடர்புகள் குறித்து அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்யும் துறையே சூழலியல் எனப்படும். சூழலியல் என்பது உயிரினங்கள் சூழலுடன் கொள்ளும் தொடர்பு பற்றிய விரிவான அறிவியல் ஆகும். சூழலியல் என்னும் கருத்துருவை முதன்முதலில் எர்னஸ்ட் ஹேக்கல் என்னும் ஜெர்மானிய உயிரியல் ஆய்வாளர் பயன்படுத்தினார். எனினும் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த இயூஜெனியஸ் வார்மிங் (Eugenius Warming) என்பவரே சூழலில் துறையின் முன்னோடி என்று அழைக்கப்படுகிறார்.

**மூன்றாம் உலகப்போர் புதினத்தில் சூழலியல் சிந்தனைகள்**

வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் புதினம் சூழலியல் கருத்துக்களை முன்னிலைப்படுத்தி படைக்கப்பட்டுள்ளது. உலகளாவிய சிந்தனையோடு மானுடம் சந்திக்கப் போகும் சவால்களையும், பூமிக்கு ஏற்படும் பாதிப்பையும் எடுத்துக்கூறி இருப்பதுடன் அதற்கான சில தீர்வுகளையும் முன்மொழிந்து சமூக அக்கறையோடு படைப்பாளி இப்புதினத்தை படைத்திருக்கிறார். மூன்றாம் உலகப்போர் புதினம் சூழலில் நோக்கம் கொண்டதாக உள்ளது. புதினத்தில் படைப்பாளி குறிப்பிடும் இயற்கைக்கு எதிராக மனிதன் தொடுத்திருக்கும் சூழலில் போர் குறித்தும், புவி வெப்பமயமாதல், நிலம், நீர்,காற்று மாசுபாடுகள் குறித்தும், இத்தகைய சிக்கல்களுக்கு படைப்பாளி முன்வைக்கும் தீர்வு குறித்தும் ஆராய்வதாக அமைகின்றது. மூன்றாம் உலகப்போர் சூழலியல் போர் இப்புதினத்தில் படைப்பாளி நிலம், நீர் காற்று ஆகியவை மாசுபடுவதால் சுற்றுச்சூழல் எவ்வாறு மாசுபடுகிறது என்பதை விளக்கியுள்ளார். சூழலியல் மாசுபாட்டால் விவசாயமும்,மனித வாழ்க்கையும் எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறது என்பதை கிராமிய பின்புலத்தை கொண்டு புதினத்தை கட்டமைத்துள்ளார். மேலும் உள்ளூர் மக்களின் ஊடாக உலகத் துயரத்தைப் பதிவு செய்திருக்கிறார். வாசிப்பு - ரசிப்பு என்கின்ற எல்லைகளைத் தாண்டி இந்த சமூகப் பிரச்சனைகளுக்கு தீர்வுகளையே பரிசாகக் கேட்கிறார். ஒருபுறம் உலகமயமாதல், இன்னொரு புறம் புவி வெப்பமயமாதல் இந்த இரண்டுக்கும் இடையே மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த விவசாயிகளின் வாழ்க்கைப் பிரச்சினைகளை காட்டுவதாக மூன்றாம் உலகப் போர் புதினம் அமைந்துள்ளது. முதல் உலகப்போர் மற்றும் இரண்டாம் உலகப்போர் என்று இரண்டு உலகப்போர்கள் முடிந்து விட்டன. ஆனால் படைப்பாளி குறிப்பிடும் மூன்றாம் உலகப்போர் எப்போது தொடங்கியது என்றும்,அது எப்போது முடிவுக்கு வரும் என்பதையும் அறுதி இட்டு கூற முடியாது என்கிறார். "முதல் இரண்டு உலகப்போர்கள் முடிந்துவிட்டன என்று சரித்திரம் அறிவித்துவிட்டது. ஆனால் மூன்றாம் உலகப்போர் தொடங்கி விட்டது என்பதை அது இன்னும் அறிவிக்கவேயில்லை. அது கண்ணுக்குத் தெரியாத யுத்தம்; கைகுலுக்கிக் கொண்டே நடக்கும் யுத்தம்; கொல்கிறவன் கொல்கிறான் என்றும் சாகிறவன் சாகிறான் என்றும் அறிந்து கொள்ள அவகாசம் தராத யுத்தம்.

இது மனிதனுக்கும் மனிதனுக்கும் மட்டுமல்ல மனிதனுக்கும் இயற்கைக்குமான போர்; மூன்றாம் உலக நாடுகளுக்கும் முன்னேறும் நாடுகளுக்கும் இடையே நிகழும் முடிவு தெரியாத போர்.

மூன்றாம் உலகப்போர் - இது முகத்துக்கு முகம் பார்த்து மோதாத போர்; ஆயுதங்களை ஒளித்துக் கொண்டு நிகழ்த்தும் போர்; மண்ணுக்கும் விண்ணுக்குமான போர்; மனிதனுக்கும் இயற்கைக்குமான போர்; இது மனித குலம் சந்தித்திராத மோசமான முகமூடி போர்; புவி வெப்பமயமாதல் - உலகமயமாதல் என்ற இரண்டு சக்திகளும் வேளாண்மைக்கு எதிராக தொடுத்திருக்கும் விஞ்ஞானப் போர்”1

மூன்றாம் உலகப்போரானது மண்ணுக்கும் விண்ணுக்கும், மண்ணுக்கும் மனிதனுக்கும் நடக்கின்ற போராக படைப்பாளி கருதுகிறார்.

**வேளாண்மைக்கு எதிராக தொடுக்கப்பட்டிருக்கும் போர்**

மனித நாகரீகத்தின் பரிணாம வளர்ச்சியானது வேளாண்மையிலிருந்தே தொடங்குகிறது. வேளாண்மையே மனித குலத்தின் வாழ்வாதாரத்திற்கு ஆணிவேராக விளங்குகிறது. நமது கலாச்சாரத்தின் அடையாளம் வேளாண்மை. இதனால் தான்

**"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை"2**

என்று வேளாண்மையை முதன்மைப்படுத்தினார் திருவள்ளுவர். இந்த வேளாண்மைக்கு எதிராக தொடுக்கப்பட்டிருக்கும் போர் தான் இந்த மூன்றாம் உலகப்போர். "உலகெங்கும் உணவுகள் மாறும்; உண்ணுதல் மாறாது; எல்லோருக்கும் உணவு வேண்டும். உலகெங்கும் இல்லங்கள் மாறும் இருத்தல் மாறாது; எல்லோருக்கும் வீடுகள் வேண்டும் உலகெங்கும் உடைகள் மாறும் உடுத்தல் மாறாது; எல்லோருக்கும் ஆடைகள் வேண்டும் இந்த மூன்றுக்கும் மூலமாய் விளங்கும் வேளாண்மையை காப்பது உலகக்கடமை. அந்த உலகக் கடமையின் தமிழ் பங்கு தான் இந்த மூன்றாம் உலகப்போர்"3 என்று தனது படைப்பு நோக்கத்தை வைரமுத்து முன்னுரையில் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

விஞ்ஞான ரீதியான மூன்றாம் உலகப் போர்

நாகரீக வளர்ச்சியில் முதன்மை பெற்ற மனிதன்தான் இந்த பூமியை சிதைக்கத் தொடங்கி விட்டான். நாகரீக வளர்ச்சி பெற்ற மனித இனத்தால் தான் சுற்றுச்சூழல் பெரும் அளவு மாசடைந்து வருகிறது. அதனால் ஓசோன் படலம் கிழிந்து வருகிறது. புவி வெப்பம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. பூமியின் சிறப்புக் காப்புறுதியானது ஓசோன் கூரை. இதை இந்த நூற்றாண்டின் தொழில் புரட்சி மனிதன் கிழித்தெறிந்து விட்டான். இதுவரை 29 மில்லியன் சதுர கிலோமீட்டர் கிழிந்து விட்டது. புவி வெப்பத்தால் ஒரு மணி நேரத்திற்கு ஒரு உயிரினம் அழிந்து கொண்டே இருக்கிறது மேலும் வெப்பம் கூடினால் பல்வேறு உயிரினங்கள் அழிய நேரிடும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். புவி வெப்பம் கூடிக் கொண்டே போவதால் அது உலகத்தை கொஞ்சம் கொஞ்சமாக அரித்துக்கொண்டிருக்கிறது . இது மற்றொரு புறத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மூன்றாம் உலகப் போர்.

**சுற்றுச்சூழல் பாதிப்பு**

இன்று அதிகளவிலான மக்கள்தொகைப் பெருக்கத்தினாலும் முறையற்ற வாழ்வியல் முறையாலும் மனிதர்களைச் சார்ந்த சுற்றுப்புறங்களும் சூழ்நிலைகளும் பெருமளவிலும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. மனிதர்கள் உயிர்வாழ அடிப்படையான நிலம், நீர், காற்று ஆகியவை மாசுபாடு அடைந்து மக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது.

**நீர் மாசுபாடு**

அதிகமான மக்களின் பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்கும் வகையில் பல தொழிற்சாலைகள் தோன்றிவிட்டன. ஆனால் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவுநீர் மனிதர்கள் பயன்படுத்தக்கூடிய நீர்நிலைகளை முற்றிலும் பயன்படுத்த முடியாத நிலை உருவாகி வருகிறது. "கரட்டுல மில்லு கட்டியிருக்காங்க. அவுங்க சாயக்கழிவுத் தண்ணித்தான் கசிஞ்சி கசிஞ்சி கெணருகள்ல செந்தண்ணியா எறங்குது. மில்லு வந்தா குடிக்க கஞ்சி கிடைக்கும்னு பாத்தா இப்ப குடிக்க தண்ணி கிடைக்காது போல இருக்கே".4

பெரும்பாலான நகரங்களில் தொழிற்சாலைகளும், சாயப்பட்டறைகளும் இயங்கிவருகின்றன. இதுபோன்ற தொழிற்கூடங்கள் கிராமங்களிலும் புகுந்துவிட்டன. இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை முறையான சுத்திகரிப்பு இல்லாமல் ஆறுகளிலும் விவசாய நிலங்களிலும் விட்டுவிடுகின்றனர். இதனால் நிலத்தடி நீர், கிணறுகளில் சுரக்கின்ற நீர்த்தன்மையும் பாதிப்படைகிறது. மேலும் மக்கள் குடிப்பதற்கும் மற்றும் விவசாயப் புழக்கத்திற்கும் நீர்த்தட்டுப்பாடு ஏற்படுகின்ற நிலையினை சின்னப்பாண்டி பாத்திரம் மூலம் நாவலாசிரியர் கூறியுள்ளதைக் காணமுடிகிறது.

**புவி மாசுபாடு**

சுற்றுச்சூழல் பாதிப்புகளில் முதன்மையாக இருப்பது மனிதன் வாழும் இந்த பூமிதான். கழிவுறுப்புக்குப் பக்கத்தில் கருவளருவதைப் போல தீமைக்குப் பக்கத்தில்தான் இந்தச் சமூகம் வளர்ந்து வந்திருக்கிறது. பூமிப்பந்தில் எங்குப் பார்த்தாலும் குப்பைகள் குவிந்த வண்ணம் காணப்படுகின்றன. அதிலும் மண்ணில் மக்காத பாலிதீன் பைகளும் பிளாஸ்டிக் பொருட்களும் பூமியின் மேற்புறத் தோற்றத்தை அழுக்கு தேசமாக்கிக் காட்டுகின்றன. "இந்த உலகில் எரியும் பிரச்சனைகளுக்கு மத்தியில் எரிக்க முடியாத பிரச்சனை குப்பை. மண்ணில் மக்கப்போகும் மனிதன் மண்ணில் மக்காத பிளாஸ்டிக்கையும் பெட்ரோலிய இழைகளையும் கண்டறிந்துவிட்டான்".5 இதுபோன்ற பிளாஸ்டிக் பாலிதீன் பை பொருட்களின் பயன்பாட்டுக் கழிவுகளால் மண்ணின் தரமும் அதன் திடத்தன்மையும் சீர்குலைகின்றன. மேலும் நிலத்தடி நீர் குறைகிறது. இதனால் மக்கள் அனைவரும் மக்காத பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்த்து புவி மாசுபடுதலைத் தடுக்க வேண்டும் என்பதை இஷிமுரா பாத்திரம் மூலம் உலக மக்களுக்கு அறிவுறுத்துகிறார் நாவலாசிரியர் வைரமுத்து.

**காற்று மாசுபாடு**

வாகனங்களிலிருந்து வெளிப்படும் புகைகள், தொழிற்சாலைப் புகைகள், மனிதர் குப்பைகளை எரிப்பதனால் உண்டாகும் புகைகள் போன்றவற்றால் காற்றானது அதிகளவில் மாசுபாடு அடைகிறது. இதனால் மனிதர்களின் சுவாசமும் சுற்றுச்சூழலும் பாதிப்படைகிறது. ஆண்டுக்கு இருநூறு மில்லியன் டன் கார்பன் மோனாக்ஸைடும், ஐம்பது மில்லியன் டன் ஹைட்ரோகார்பனும், நூற்றைம்பது மில்லியன் டன் சல்பர் டை ஆக்ஸைடும், நூற்றுத் தொண்ணூறு மில்லியன் டன் சாம்பலும் காற்றில் கலந்து கொண்டிருக்கிறது".6 இவ்வாறு காற்றில் கலப்பதால் காற்று பெருமளவு பாதிக்கப்படுவதோடு ஓசோன் மண்டலம் எனப்படும் காற்றடுக்கு படலம் கிழிந்து அதன் வழியாக சூரியனிலிருந்து வெளிப்படும் புறஊதாக்கதிர்கள் பூமியிலுள்ள உயிரினங்களை நேரிடையாக பாதிப்படையச் செய்கின்றன. ஆகவே மக்கள், காற்றும் காற்று மண்டலமும் பாதிக்காத வாழ்க்கை முறைகளை மேற்கொள்ள வேண்டும் என எமிலி பாத்திரம் மூலம் தன் நாவல்வழி வலியுறுத்துகிறார் வைரமுத்து.

**புவி வெப்பமயமாதல்**

புவியானது அதிகளவில் வெப்பமடைந்து வருகிறது. இதற்கு முழுமுதற்காரணம் மனிதன். ஏனெனில் காடுகளையும் மரங்களையும் வெட்டித் தன் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிறான். மேலும் அறிவியல் கண்டுபிடிப்புகளும் புவிவெப்பமாதலுக்குக் காரணமாகின்றன. "புவிவெப்பமாதலில் பருவநிலை மாற்றம் கண்டுவிட்டது. கடந்த நூற்றாண்டுகளில் இந்திய வெப்பநிலை 0.48 டிகிரி செல்சியஸ் கூடியிருக்கிறது".7

புவி வெப்பம் இனிமேலும் அதிகரிக்காமல் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில் ஐரோப்பின் ஒரு பகுதியும் மத்திய கிழக்கின் பெரும்பகுதியும் வாழத் தகுதி இழந்துபோகும் நிலை உண்டாகும். "புவி வெப்பம் கூடிக்கொண்டே இருக்கிறது. ஒரு டிகிரி வெப்பம் கூடியதற்கே சில பறவை இனங்களும், கம்பளித்தோல் கொண்ட விலங்கினங்களும் பூமியைவிட்டே போய்விட்டன. புவிவெப்பத்தால் ஒரு மணி நேரத்திற்கு ஒரு உயிரினம் அழிந்து கொண்டிருக்கிறது".8

நாளுக்கு நாள் உயரும் புவிவெப்பம் காரணமாக பறவைகளும், விலங்குகளும் மட்டுமல்ல மண்ணில் மனித இனமும் இல்லாமல் போகும் நிலை வந்துவிடும் என்று எமிலி பாத்திரம் மூலம் விளக்குகிறார் நாவலாசிரியர்.

**புவி வெப்பத்தின் விளைவுகள்**

புவி வெப்பத்தின் காரணமாக எதிர்பாராத பல நிகழ்வுகளும் விளைவுகளும் ஏற்பட்டுவிட்டன. "ஆர்கன்சாஸ் மாநிலத்தில் தலைக்கு மேலே பறந்த ஐயாயிரம் பறவைகள் பொத்தென்று தரையில் விழுந்து செத்தன. ரஷ்யாவில் நீராடப்போன பலர் சூடு தாங்காமல் நீர்நிலைகளில் செத்து மிதந்தனர். விஸ்காலின் நகரத்தில் மேய்ந்து கொண்டிருந்த சில நூறு பசுக்கள் சூடு தாங்காமல் ஒரே நேரத்தில் இறந்து போயின"9 என்பதை எமிலி பாத்திரம் மூலம் விளக்குகிறார் நாவலாசிரியர்.

**"உலகத்தின் பத்துக்கோடி மக்கள் கடல் மட்டத்திலிருந்து மூன்றடி உயரத்தில் தான் வாழ்கிறார்கள். புவிச்சூடு கட்டுப்படுத்தப்படாவிட்டால் இப்போதுள்ள கடல் மட்டம் மூன்றடி கூடும். இதனால் ஏழுகோடி மக்கள் இடம்பெயர நேரிடும்".10**

அதிகரித்து வரும் புவிச் சூட்டினால் பனிப்பாறைகள் வேகமாக உருகிவருகின்றன. இதனால் கடல் மட்டம் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. மேன்மேலும் கடல் மட்டம் உயர்ந்தால் மக்கள் இடம்பெயர நேரிடுவதோடு மக்கள்தொகைப் பெருக்கமும் சுற்றுச்சூழல் பாதிப்பும் மிகுதியாக ஏற்படும். எனவே புவிச்சூடு அதிகரிக்காமல் கட்டுப்படுத்த மக்களோடு அரசும் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என இஷிமுரா பாத்திரத்தின் மூலமாக புவிவெப்பத்தின் விளைவுகளைக் குறிப்பிடுகிறார் நாவலாசிரியர்.

**புவிவெப்பம் - தடுக்கும் முறைகள்**

புவிவெப்பம் தடுக்கவும் அதிகரிக்காமல் கட்டுப்படுத்தவும் "பூமியை மரங்களால் நிரப்புவோம், மரங்களெல்லாம் புவிவெப்பத்திற்கு எதிராய்க் கைதூக்கிப் போராடும் போராளிகள், மரங்களின் சிறகடியில் ஊர் பத்திரமாய் பாதுகாக்கப்படட்டும். புவிவெப்பத்திற்கு எதிராக மனிதன் தொடுக்கும் முதல் போர் இதுவாக இருக்கட்டும்".11 மனிதர்கள் காடுகளை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். புதிய பல மரக்கன்றுகளை நட்டு வளர்த்தல் வேண்டும். அப்போதுதான் புவிச்சூடு குறையும் என்று எமிலி பாத்திரம் கூறுவதாக அமைகிறது.

இயற்கை வளம் பாதுகாத்தல்

இயற்கை வளங்களான மலைகள், ஆறுகள், காடுகள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும். "மேற்குதொடர்ச்சி மலையைக் காப்பது அவசியமாகும். இந்தியாவின் அறுபது சதவீதம் நனைக்கும் நதிகள் மேற்குதொடர்ச்சி மலையிலேதான் ஊற்றெடுக்கின்றன".12 மலையின் மேலுள்ள மரங்களை வெட்டுவதால் மலையின் உயரம் குறைகிறது. மலையின் உயரம் குறையுமானால் மழையின் அளவும் குறையும். ஆகவே மலையைப் பாதுகாக்க வேண்டும் என சின்னப்பாண்டி பாத்திரம் மூலம் குறிப்பிடுகிறார் வைரமுத்து. மேலும் "இந்திய நதிகளை இணைப்பது இருக்கட்டும். முதலில் நதிகளை வாழவிடுங்கள். மலையைக் காப்பாற்றுங்கள். மழையைக் காப்பாற்றலாம். முப்பத்தொரு விழுக்காடு காடுகள் இருக்க வேண்டிய தேசத்தில் இருபத்தைந்து விழுக்காடுதான் உள்ளன".13எனவே சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்கவும் வேளாண்மைத் தொழிலை மேம்படுத்தவும் முதலில் இயற்கை வளங்களை அழிக்காமல் பாதுகாக்க வேண்டுமென எமிலி பாத்திரம் மூலம் விளக்கியுள்ளார் வைரமுத்து.

**விவசாயிகள் நிலை**

"மழையில்ல, வயித்துல ஈரத்துணிய கட்டி படுத்திருக்கான் விவசாயி, வெளச்சல் இருந்தா வெலை இருக்காது. வெலை இருந்தா வெளச்சல் இருக்காது. காசு இருந்தா ஆள் கிடைக்காது. ஆள் கிடைச்சா காசு இருக்காது. கரண்டு இருந்தா தண்ணி இருக்காது. தண்ணி இருந்தா கரண்டு இருக்காது.எடஞ்சல் மேலே

எடஞ்சலாகிப் போச்சப்பா கலப்பை புடிச்சவன் பொழப்பு"14 என்று கிராம மக்களான கெடாவீரன், பரமனாண்டி, ஒத்தவீட்டு மூளி போன்ற பாத்திரங்கள் மூலம் விவசாயத் தொழிலுக்குண்டான சிக்கலைக் குறிப்பிடுகிறார் நாவலாசிரியர்.

"புவி வெப்பமயமாதல் உலகமயமாதல் என்ற இரண்டு பூதங்களால் ஒரு விவசாயி ஒரே நேரத்தில் விழுங்கப்படுகிறான். அவனது உற்பத்திப் பொருளின் விலையைப் பங்குச் சந்தைகளும், தங்கச் சந்தைகளும் தீர்மானிக்கின்றன".15 பொருளை உற்பத்தி செய்பவனுக்கு அதன் விலையை நிர்ணயம் செய்ய உரிமை இல்லை என்கிற நிலையை எமிலி எழுதியுள்ள கட்டுரையின் மூலம் வெளிப்படுத்தி உள்ளார்.

விவசாய வீழ்ச்சி

மண் வளமின்மை, நீர்ப் பற்றாக்குறை, விளைநிலம் விற்பனை போன்ற காரணங்களால் விவசாயம் வீழ்ச்சியடைந்து விட்டது. கடந்த இருபது ஆண்டுகளில் விளைநிலங்கள் சுருங்கிவிட்டன. "உலகம் உயிர்களைச் சார்ந்திருக்கிறது. உயிர்கள் உணவை சார்ந்திருக்கிறது. உணவு விவசாயத்தைச் சார்ந்திருக்கிறது. இன்று விவசாயத்தின் நாற்பது விழுக்காட்டு நிலங்கள் ஈனும் சக்தியை இழந்துவிட்டன”.16 மண்ணில் அதிகமான இரசாயன உரங்கள் இடுவதால் மண் மலடாகி மண்ணிலுள்ள உயிர்ச்சத்து அழிந்து ஈனும் தன்மையை இழக்கிறது. இதனால் விவசாயமும் உற்பத்தியும் பெருமளவில் வீழ்ச்சியடைந்து விட்டது.

இயற்கை விவசாயம்

"இந்தியா கண்டடைந்த மிகப்பெரிய தொழில்நுட்பம் இயற்கை விவசாயம். அதைத் தொலைத்துவிட்டது இந்தியா. மண் ஈன்று கொடுப்பதெல்லாம் உள்ளிருக்கும் உயிர்த் தன்மையால் தான். அந்த உயிர்த் தன்மை இரசாயன உரமிட்டுக் கொல்லப்படுகிறது. பன்னிரண்டு கிலோ மண்ணின் உயிர்த்தன்மை கொல்லப்பட்ட பிறகுதான் ஒரு கிலோ விளைகிறது".17 ஆகவே விவசாயிகள் விவசாயத்திற்கு ஆடு, மாடு முதலியவற்றின் எருக்களைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு மக்கள் அதிகமான கால்நடைகளைப் பெருக்க வேண்டுமென இஷிமுரா பாத்திரம் மூலம் மக்களுக்கு உணர்த்தியுள்ளார் வைரமுத்து.

**தொகுப்புரை**

மூன்றாம் உலகப்போர் நாவலில் வைரமுத்து பல்வேறு சமூகச் சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளார். நிலம், நீர், காற்று மாசுபடுதல் மற்றும் புவி வெப்பமயமாதலின் காரணம், அதன் விளைவுகள், புவி வெப்பம் தடுக்கும் முறைகள், இயற்கை வளம் பாதுகாத்தல், விவசாயிகள் நிலை, ஏழ்மை, விவசாயி தற்கொலை, தற்கொலையின் காரணங்கள் மற்றும் அரசு தரும் இலவசத்தால் உழைப்பை மறந்த விவசாயிகள், விவசாய வீழ்ச்சி, அதன் காரணங்கள், இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் போன்றவை இந்நாவலின் மையக்கருத்துக்களாக இடம்பெற்றுள்ளன.

**துணைநின்றவை**


- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 52.
- திருவள்ளுவர். திருக்குறள். குறள் எண் 1031.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். முன்னுரை.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கங்கள் 26-27.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கங்கள் 249-250.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 55.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 308.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 55.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 56.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 192.

- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கங்கள் 341-342.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 286.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 31.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கங்கள் 24-25.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 57.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 136.
- வைரமுத்து. மூன்றாம் உலகப்போர். பக்கம் 289.


**References:**


1. Vairamuthu. Mundram Ulagappor. p. 52.
2. Vairamuthu. Mundram Ulagappor. Introduction.
3. Vairamuthu. Mundram Ulagappor. pp. 26-27.
4. Vairamuthu. Mundram Ulagappor. pp. 249-250.
5. Vairamuthu. Mundram Ulagappor. p. 55.
6. Vairamuthu. Mundram Ulagappor. p. 308.
7. Vairamuthu. Mundram Ulagappor. p. 55.
8. Vairamuthu. Mundram Ulagappor. p. 56.
9. Vairamuthu. Mundram Ulagappor. p. 192.
10. Vairamuthu. Mundram Ulagappor. pp. 341-342.
11. Vairamuthu. Mundram Ulagappor. p. 286.
12. Vairamuthu. Mundram Ulagappor. p. 31.
13. Vairamuthu. Mundram Ulagappor. pp. 24-25.
14. Vairamuthu. Mundram Ulagappor. p. 57.
15. Vairamuthu. Mundram Ulagappor. p. 136.
16. Vairamuthu. Mundram Ulagappor. p. 289.



**Copyright (c) Author**

**This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**
Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.